©
தமிழ்நாடு அரசு
2009

[Regd. No. TN/CCN/467/2009-11.
[விலை: ரூ. 7.20 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 17]  சென்னை, புதன்கிழமை, மே 6, 2009
சித்திரை 23, திருவள்ளுவர் ஆண்டு – 2040

## பகுதி III—பிரிவு 1(a) இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

**கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை**

**தமிழ்நாடு 2008ஆம் ஆண்டு அரிசி (சேமிப்பு கட்டுப்பாடு) ஆணை**

**அறிவிக்கை**

*[அரசாணை (நிலை) எண் 102, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (D1) துறை, நாள்: 5 ஜூன் 2008.]*

அரிசி வழங்கலைப் பராமரிப்பதற்கும், அது சம அளவில் வழங்கப்படுவதையும் நியாயவிலைகளில் கிடைக்கப் பெறுவதையும் உறுதி செய்வதற்கும், மேற்சொன்ன பொருட்களின் சேமிப்புக் கட்டுப்பாட்டுக்கு, வகை செய்வது அவசியமானது மற்றும் உகந்தது என்று மாநில அரசு கருதுவதால்,

தற்போது 1955 ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 10/1955) 3 ம் பிரிவிலும், 25 அக்டோபர் 1972 ஆம் நாளிட்ட ***இந்திய அரசிதழின் சிறப்பு வெளியீட்டில்*** பாகம் II பிரிவு 3, (i) உட்பிரிவில் வெளியிடப்பட்ட, மத்திய அரசின் வேளாண் அமைச்சகத்தின் (உணவுத் துறை) 25 அக்டோபர் 1972 ஆம் நாளிட்ட G.S.R. 452(E) ஆம் எண் ஆணையின்படியும், 7 ஏப்ரல் 2008 ஆம் நாளிட்ட ***இந்திய அரசிதழின் சிறப்பு வெளியீட்டில்,*** பாகம் II, பிரிவு 3, (ii) உட்பிரிவில் 2 ஆம் பக்கத்தில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட மத்திய அரசின் நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோக அமைச்சகத்தின் (நுகர்வோர் விவரகாரங்கள் துறை) 7 ஏப்ரல் 2008 ஆம் நாளிட்ட S.O. 823(E) ஆம் எண் ஆணையின்படியும், மத்திய அரசின் முன்இசைவைப் பெற்றும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், கீழ்க்காணும் அணையை இதனால் இயற்றுகிறார். அதாவது:—

**1. குறுந்தலைப்பு, பரப்பு மற்றும் தொடக்கம்:—**

(1) இந்த ஆணை, தமிழ்நாடு 2008 ஆம் ஆண்டு அரிசி (சேமிப்புக் கட்டுப்பாடு) ஆணை என அழைக்கப்படும்.

(2) இது, தமிழ்நாடு மாநிலம் முழுவதற்கும் பரவி இருக்கும்

(3) இது, உடனடியாக செயலுக்கு வரும்.

**2. பொருள் விளக்கங்கள்:—**

இந்த ஆணையில் சந்தர்ப்பம் வேறு பொருள் குறித்தாலன்றி, மற்றபடி

*(a)* “சட்டம்” என்பது, 1955 ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் சட்டம் (மத்தியச் சட்டம் 10/1955) எனப் பொருள்படும்.

*(b)* “அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரி” என்பது மாவட்டத்திலுள்ள மாவட்ட வழங்கல் அதிகாரிகள் மற்றும் சென்னை மாநகரைப் பொறுத்த வரையில் வடக்கு மற்றும் தெற்கு நுகர்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துணை ஆணையாளர் எனப் பொருள்படும்.

*(c)* ''சூழ்ந்துள்ள பகுதி'' என்பது, அம்பத்தூர் வட்டம், திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள பூவிருந்தவல்லி வட்டத்தைச் சேர்ந்த ஆவடி நகராட்சி, காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள தாம்பரம் வட்டம் ஆகியவற்றை உள்ளடக்கிய பகுதி எனப் பொருள்படும்.

*(d)* ''பெருமளவில் நுகர்வோர்'' என்பது, ஒரு ஓட்டல், ஒரு உணவகம், ஒரு இனிப்பகம் (halwai) ஒரு மருத்துவமனை, கல்வி நிறுவனம் ஒன்றுடன் இணைந்துள்ள மாணவரில்லம், பணிபுரியும் மகளிருக்கான இல்லம், தங்குமிட வசதிகளுடன் கூடிய சமய நிறுவனம் அல்லது அறக்கட்டளை நிறுவனம் எனப் பொருள்படும்.

*(e)* ''ஆட்சியர்'' என்பது,—

(i) சென்னை மாநகர் மற்றும் அதனைச் சூழ்ந்துள்ள பகுதியைப் பொறுத்தவரையில், அவரவர் சம்பந்தப்பட்ட அதிகார வரம்பிற்குள், நேர்விற்கேற்ப, வடக்கு மற்றும் தெற்கு நுகர்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துணை ஆணையாளர்கள் எனவும், மற்றும்

(ii) பிற இடங்களில், கூடுதல் மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட வருவாய் அதிகாரி உட்பட சம்ந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர் எனவும் பொருள்படும்.

*(f)* ''ஆணையாளர்'' என்பது, நுகர்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு கூடுதல் ஆணையாளர்கள் அல்லது இணை ஆணையாளர்கள் உட்பட நுகர்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு ஆணையாளர் எனப் பொருள்படும்.

(g) ''தகுதிவாய்ந்த அதிகாரி'' என்பது—

(i) சென்னை மாநகர் மற்றும் அதனைச் சூழ்ந்துள்ள பகுதியில் உள்ள சோதனை ஆய்வாளர் பதவித் தரத்திற்குக் குறையாத நுகர்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் யாதொரு அதிகாரி;

(ii) சென்னை மாநகர் மற்றும் அதனைச் சூழ்ந்துள்ள பகுதி நீங்கலாக, மாவட்டங்களிலுள்ள துணை வட்டாட்சியர் பதவித் தரத்திற்குக் குறையாத வருவாய்த்துறையின் யாதொரு அதிகாரி;

(iii) காவல்துறை சார்பு ஆய்வாளர் பதவித்தரத்திற்குக் குறையாத காவல்துறையின் யாதொரு அதிகாரி மற்றும்

(iv) ஆணையாளர் சிறப்பாக அனுமதியளிக்கிற நுகர்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் யாதொரு அதிகாரி எனப் பொருள்படும்.

*(h)* ''கட்டுப்பாட்டு அதிகாரி'' என்பது—

(i) சென்னை மாநகர் மற்றும் அதனைச் சூழ்ந்துள்ள பகுதியைப் பொறுத்த வரையில், அவரவர் அதிகார வரம்பிற்குட்பட்ட நுகர்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறையின் உதவி ஆணையாளர்கள்;

(ii) பிற இடங்களில் அவரவர் அதிகார வரம்பிற்குட்பட்ட மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை அதிகாரிகள் எனப் பொருள்படும்.

*(i)* ''வணிகர்'' என்பது, மொத்த விற்பனையாளராக அல்லது சில்லறை விற்பனையாளராக அல்லது தற்காலிக வணிகர்களாக அல்லது தரகு முகவர்களாக அல்லது தரகர்களாக அல்லது ஏலதாரர்களாக அரிசி கொள்முதல் செய்யும் அல்லது சேமித்து வைக்கும் அல்லது விற்பனை செய்யும் தொழிலில் ஈடுபட்டுள்ள அல்லது அத்தகைய தொழிலில் ஈடுபட்டுள்ள வேறு யாதொரு வணிக முகவர்கள் அல்லது யாதொரு சமயத்தில், அரசால் அவ்வப்போது குறிப்பிடப்படக்கூடிய அத்தகைய அளவுகளுக்கு மிகையாக வணிகம் செய்வதுடன் அரிசி ஆலையை இயக்குகிற ஒரு நபர் எனப் பொருள்படும். ஆனால், அவருக்குச் சொந்தமான அல்லது குத்தகைக்கு வைத்துள்ள நிலத்தில் சொந்தமாக சாகுபடி செய்ததன் மூலம் உற்பத்தி செய்த அரிசியை விற்பனை செய்வதற்காக சேமித்து வைத்திருக்கிற ஒரு நபர் இதில் அடங்கமாட்டார்.

*விளக்கம்:—* இந்தத் துணைப்பகுதியின் செயல்நோக்கத்திற்காக யாதொரு சமயத்தில் கீழ்க்காணும் அளவுகளுள்ள அரிசியை உடைமையாக வைத்துள்ள யாதொரு நபர் தான் ஒரு வணிகர் அல்லர் என்று வேறுவகையில் நிரூபித்தாலன்றி, மற்றபடி வணிகராகக் கருதப்பட வேண்டும். தான் ஒரு வணிகர் அல்லர் என்பதை நிரூபிக்கும் பொறுப்பு சம்பந்தப்பட்ட நபரைச் சார்ந்ததாகும், அதாவது:

*(j)* ''படிவம்'' என்பது இந்த ஆணையுடன் இணைக்கப்பட்டுள்ள ஒரு படிவம் எனப் பொருள்படும்.

*(k)* ''அரசு'' என்பது, தமிழ்நாடு அரசு எனப் பொருள்படும்.

*(l)* ''அரைவையாளர்'' என்பது அரிசி ஆலை விவகாரங்கள்மீது ஒட்டுமொத்த கட்டுப்பாட்டைப் பெற்றுள்ள ஒரு நபர் அல்லது அதிகாரி எனப் பொருள்படும் மற்றும் மேற்சொன்ன விவகாரங்கள், மேலாளர், மேலாண்மை இயக்குநர் அல்லது மேலாண்மை முகவர் ஒருவரிடம் ஒப்படைக்கப்படும்போது, யாதொரு சமயத்தில், அரசால் அவ்வப்போது குறிப்பிடப்படக்கூடிய அத்தகைய அளவுகளுக்கும் மிகையாக அரிசி வணிகம் செய்கிற அத்தகைய மேலாளர், மேலாண்மை இயக்குநர் அல்லது மேலாண்மை முகவர் எனப் பொருள்படும்.

*விளக்கம்:*—இந்தத் துணைப்பகுதியின் செயல்நோக்கத்திற்காக, யாதொரு சமயத்தில், கீழ்க்காணும் அளவுகளுள்ள அரிசியை, உடைமையாக வைத்துள்ள யாதொரு நபர், தான் ஒரு வணிகர் அல்லர் என்று வேறுவகையில், நிரூபித்தாலன்றி மற்றபடி, வணிகராகக் கருதப்பட வேண்டும், தான் ஒரு வணிகர் அல்லர் என்பதை நிரூபிக்கும் பொறுப்பு, சம்பந்தப்பட்ட நபரைச் சார்ந்ததாகும், அதாவது:—

அரிசி—500 குவின்டால்

(m) ''வியாபார இடம்'' என்பது அரிசியை சேமித்து வைக்கும் இடம் நீங்கலாக அரவையாளர் அல்லது வணிகர் ஒருவர், தான் இருப்பு வைத்துள்ள அரிசியை விற்பனை செய்யும் இடம் எனப் பொருள்படும்;

(n) ''அரிசி'' என்பது, உடைந்த அரிசி, மற்றும் தவிடு அரிசி–உமி, பொரி அல்லது அவல் நீங்கலாக அரிசிப் பொருட்கள் ஆகியவை உட்பட உமி நீக்கப்பட்ட நெல் எனப் பொருள்படும்.

**3. அரிசியின் அதிக அளவு இருப்பு வரம்பு:–**

மாநிலத்திலுள்ள இருப்பு அளவையும், பொதுமக்களின் தேவையையும் பொறுத்து, ஏதேனும் காலகட்டத்தில் ஒரு அரவையாளர் அல்லது வணிகர் ஒருவர் வைத்திருக்க வேண்டிய அரிசியின் அதிக அளவு இருப்பு வரம்பை அவ்வப்போது அரசு குறிப்பிடும்.

**4. வணிகர்களின் செயல்பாட்டுப் பகுதி:**

(1) யாதொரு வணிகர், தமிழ்நாடு மாநிலம் முழுவதிலும் அரிசியை கொள்முதல் செய்யலாம். ஆனால், கொள்முதல் செய்த நாளிலிருந்து, ஏழு நாட்களுக்குள், இருப்பை, அவருடைய வியாபார இடத்திற்கு அல்லது சேமிப்பு இடத்திற்கு அவர் எடுத்துச் செல்ல வேண்டும்.

(2) யாதொரு வணிகர், தமிழ்நாடு மாநிலத்திற்கு வெளியேயிருந்து அரிசியை கொள்முதல் செய்யலாம். அதன் இருப்பை கொள்முதல் செய்த நாளிலிருந்து ஒரு மாதத்திற்குள், அவருடைய வியாபார இடத்திற்கு அல்லது சேமிப்பு இடத்திற்கு அவர் எடுத்துச் செல்ல வேண்டும்.

ஆனால், வணிகர், அவருடைய கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணங்களினால், மேற்சொன்ன கால அளவிற்குள், இருப்புகளை எடுத்துச் செல்ல இயலாத நேர்வில், அவருடைய வியாபார இடம் அல்லது சேமிப்பு இடம் அமைந்துள்ள மாவட்ட ஆட்சியரிடமிருந்து கால அவகாச நீட்டிப்பை, அவர் பெறவேண்டும்.

**5. அரசின் இருப்புகளைப் பெறுவதற்கு, வைத்திருப்பதற்கு மற்றும் விற்பனை செய்வதற்கு சில வணிகர்களுக்கு அனுமதியளித்தல்:**

(1) அதிகாரம் பெற்ற அதிகாரி, யாதொரு வணிகருக்கு கீழ்க்கண்டவற்றிற்கு அனுமதியளிக்கலாம்.

(அ) குறிப்பிடக்கூடிய அத்தகைய கால அளவிற்கு, அத்தகைய விலையில், யாதொரு நபரிடமிருந்து, யாதொரு அரிசியை, அரசின் சார்பில் கொள்முதல் செய்தல்; அல்லது

(ஆ) துணைப்பகுதி (a)–ன்கீழ், ஏனைய யாதொரு வணிகர் அல்லது நபர்கள் வழங்கிய அரிசியின் இருப்புகளை, அரசின் சார்பில் பெற்றுக்கொள்ளுதல்; அல்லது

(இ) அவர் பொருத்தமானது என்று கருதக்கூடிய அத்தகைய கால அளவிற்கு, அரசின் சார்பில் வைத்திருத்தல் மற்றும் அதிகாரம் பெற்ற அதிகாரி அவ்வப்போது குறிப்பிடக்கூடிய அத்தகைய முறையிலும், அத்தகைய நிபந்தனைகளுக்கு உட்பட்டும் அதை விற்பனை செய்தல்.

(2) (1) துணைப் பகுதியின் கீழ் அவ்வாறு அனுமதியளிக்கப்பட்ட யாதொரு வணிகர், அரசுக்குச் சொந்தமான அல்லது அரசால் கட்டுப்படுத்தப்பட்ட அரிசியை மட்டுமே விற்பனை செய்ய வேண்டும்.

(3) அதிகாரம் பெற்ற அதிகாரி, முப்பது நாட்கள் முன்கூட்டியே அறிவிப்பு கொடுப்பதன் பேரில் அத்தகைய அனுமதியைத் திரும்பப் பெறலாம்.

(4) ஒவ்வொரு வணிகரும், உண்மையான மற்றும் சரியான கணக்கு ஒன்றை வைத்துவருவதோடு, அதிகாரம் பெற்ற அதிகாரி, அவ்வப்போது குறிப்பிடக்கூடிய அத்தகைய பிற பதிவுருக்களையும் வைத்து வரவேண்டும்.

**6. தகவல் அளித்தல்:**

பகுதி–II–ல் குறிப்பிடப்பட்டுள்ள இருப்பு வரம்புகளுக்கும் மிகையாக அரிசியை வைத்துள்ள ஒவ்வொரு அரைவையாளர் அல்லது வணிகர், அவருக்கு வரப்பெற்று, விற்பனை செய்த அரிசி மற்றும் அவர் வைத்துள்ள அரிசியின் இருப்பு ஆகியவற்றைப் பொறுத்த வரையில் படிவம்–A–ல் இரு வார கால கணக்கு விவர அறிக்கை ஒன்றை, கட்டுப்பாட்டு அதிகாரிக்கு அளிக்க வேண்டும்.

**7. கணக்கு விவர அறிக்கைகள்:**

(1) அரிசி விற்பனை செய்கிற ஒவ்வொரு அரைவையாளர் அல்லது வணிகர், படிவம்–B–ல், மாதாந்திர கணக்கு விவர அறிக்கை ஒன்றை, கட்டுப்பாட்டு அதிகாரிக்கு அளிக்க வேண்டும்.

(2) அரிசி விற்பனை செய்கிற ஒவ்வொரு அரைவையாளர் அல்லது வணிகர், ஆணையாளர் அல்லது மாவட்ட ஆட்சியர் குறிப்பிடக்கூடிய அத்தகைய கால இடைவெளிகளில், அத்தகைய பிற விவர அறிக்கைகளையும் அளிக்க வேண்டும்.

**8. விலக்கு அளிப்பதற்கான அதிகாரம்:**

அரசு, மத்திய அரசின் முன் ஒப்புதலுடன், அறிவிக்கை மூலம், அரிசியின் மிகையான இருப்பு, எந்த கால அளவிற்குள் விற்பனை செய்யப்பட வேண்டும் என்பதைக் குறிப்பிட்டு, யாதொரு நபருக்கு, நிறுவனத்திற்கு அல்லது ஏனைய யாதொரு முகவரமைப்பிற்கு, இந்த ஆணையின் விதித்துறைகளிலிருந்து விலக்கு அளிக்கலாம் மற்றும் யாதொரு சமயத்தில், அத்தகைய விதிவிலக்கிலிருந்து மாறுபடலாம்; விதிவிலக்கைத் திருத்தியமைக்கலாம்; ரத்து செய்யலாம் அல்லது திரும்பப் பெறலாம் மற்றும் அத்தகைய விதிவிலக்கை தற்காலிகமாக நிறுத்தி வைக்கலாம்;

ஆனால், பிற நாடுகளிலிருந்து அரிசி இருப்புகளை இறக்குமதி செய்வதற்கு மத்திய அரசு அளித்த பகிரங்க பொது உரிமத்தின்கீழ் இறக்குமதி செய்யப்பட்ட அரிசியைப் பொறுத்த வரையில், குறிப்பிடப்பட்ட இருப்பு வரம்புகளுக்காக, இறக்குமதியாளர்களுக்கு விதிவிலக்கு, அளிப்பதற்கு, மத்திய அரசின் முன் ஒப்புதல் பெறத் தேவையில்லை.

**9. உத்தரவுகள் பிறப்பிப்பதற்கான அதிகாரம்:**

(1) அரசு, ஆணையாளர் மாவட்ட ஆட்சியர் அல்லது கட்டுப்பாட்டு அதிகாரி, அரிசி வழங்கலை கண்காணிக்கும் நோக்கத்திற்காகவும், நியாயவிலைகடைகளில் அவை சமமான அளவில் வழங்கப்படுவதையும், இருப்பில் இருப்பதையும் பாதுகாக்கும் பொருட்டு, இந்த ஆணையின் விதித்துறைகளை செயலுக்குக் கொண்டு வருவதற்காக உத்தரவுகள் பிறப்பிக்கலாம். அரைவையாளர்கள், வணிகர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட நபர்கள் அனைவரும் இத்தகைய உத்தரவுகளுக்கு இணங்கி நடக்க வேண்டும்.

(2) (1) ஆம் துணைப் பகுதியில் பொதுவான தன்மைக்கு பாதகமில்லாமல் பின்வரும் பிரச்சினைகள் அனைத்திற்கு அல்லது ஏதாவது ஒன்றுக்கு, அத்தகைய உத்தரவுகள் வகை செய்யப்படலாம், அதாவது:—

(a) கொள்முதல் பட்டிகள், கைச்சாத்துகள், ஆவணங்கள், கணக்குகள், கொள்முதல், இருப்பு மற்றும் அரைவையாளர் அல்லது வணிகர் விற்பனை செய்த அரிசி தொடர்பான பதிவேடுகள் வைத்துவருதல் மற்றும் அரைவையாளர் அல்லது வணிகர் வைத்திருந்த அரிசி இருப்புகள், குறித்த விவரங்களை காலமுறை தவறாது அளித்தல், அரைவையாளர் மற்றும் வணிகர் அவ்வப்போது மேற்கொண்ட கொள்முதல் மற்றும் விற்பனைகள்; ஆகியவை குறித்து குறிப்பிட்ட காலஅளவிற்கொருமுறை விவரக் கணக்குகளை அளித்தல்;

(b) அரைவையாளர் அல்லது வணிகர் விற்பனை செய்த அரிசி இரசீதுகள் மற்றும் பொருள் விவரப்பட்டியல்களை வழங்குதல்;

(c) அரிசி விற்பனையில் ஈடுபட்டுள்ள அரைவையாளர் அல்லது வணிகர் வைத்துள்ள அரிசி சேமிப்பு இடங்கள் உட்பட, அரைவையாளர் அல்லது வணிகரின் வணிக செயல்பாடு கொண்ட பகுதியை மாற்றியமைத்தல், திருத்தியமைத்தல் அல்லது வேறுபடுத்துதல் ;

(d) யாதேனும் ஒரு நேரத்தில் அல்லது யாதொரு நேரத்தின்போது, அரிசி கொள்முதல், விற்பனை மற்றும் சேமிப்பு குறித்த உயரளவு அல்லது குறைந்தளவு வரம்பினை மாற்றியமைத்தல், திருத்தியமைத்தல் அல்லது வேறுபடுத்துதல்;

(e) அரிசி எவரிடமிருந்து அல்லது எந்தெந்த நிறுவனங்களிடமிருந்து வாங்க வேண்டும் மற்றும் எவரெவருக்கு, எந்தெந்த நிறுவனங்களுக்கு அரைவையாளர்கள் அல்லது வணிகர் விற்பனை செய்ய வேண்டும் என்பதற்கான நிபந்தனைகள்;

(f) அரிசி சேமிப்பு இடங்கள் மற்றும் சேமித்து வைக்கப்பட வேண்டிய முறைகள் உட்பட வணிக வளாகங்களை பேணுதல்.

**10. அரிசி வைத்திருப்பதற்கு அல்லது விற்பனை செய்வதற்கு மறுப்பு தெரிவிப்பது தொடர்பான வரையறை:—**

யாதொரு அரைவையாளர் அல்லது வணிகர், அவர் வைத்திருந்த அரிசியை விற்பனை செய்யாமல் அல்லது விற்பனை செய்வதற்கு மறுப்பு தெரிவித்து, அவற்றை வைத்திருக்கக்கூடாது.

**11. அரிசி இருப்பு தொடர்பான வரையறை:**

(1) யாதொரு அரைவையாளர் அல்லது வணிகர், இந்த ஆணை செயலுக்கு வந்த நாளிலிருந்து பதினைந்து நாட்களுக்குப் பின்னர், அவரோ அல்லது அவர் சார்பாக யாதொரு நபரோ, கீழே குறிப்பிடப்பட்ட அளவைக் காட்டிலும் மிகையாக யாதொரு அரிசியை யாதொரு சமயத்திலும் இருப்பில் அல்லது அவர் பொறுப்பில் வைத்திருக்கக்கூடாது.

| *தொடர் எண்* (1) | *வகை* (2) | *இருப்பு அளவுகள் (குவிண்டாலில்)* (3) |
|---|---|---|
| 1. | கூடுதலாக அரிசி ஆலையை இயக்கி வருகிற வணிகர் | 3,600 குவிண்டால் அரிசி |
| 2. | (i) கூடுதலாக அரிசி ஆலை இயக்காத வணிகர் | 1,000 குவிண்டால் அரிசி |
| | (ii) அரைவையாளர் | 1,000 குவிண்டால் அரிசி |
| 3. | சில்லறை விற்பனைக்கு அரிசி வியாபாரம் செய்கிற வணிகர் | 200 குவிண்டால் அரிசி |

மேலும், அரைவையாளர் அல்லது வணிகரால் ஏனைய மாநிலங்களிலிருந்து கொள்முதல் செய்யப்பட்ட அரிசி இருப்பிற்கு மேலே குறிப்பிடப்பட்ட அரிசி இருப்பு அளவுகள் பொருந்தாது. ஆனால் அவ்வாறு கொள்முதல் செய்யப்பட்ட அரிசி இருப்பு, ஒரு மாத காலத்திற்குள் விற்பனை செய்யப்பட வேண்டும்.

(2) (1) உட்பகுதியில் குறிப்பிடப்பட்ட அரைவையாளர் அல்லது வணிகர் ஒவ்வொருவரும், அந்த உட்பகுதியில் குறிப்பிடப்பட்ட காலஅளவு முடிவடைந்த உடனேயே, (1) உட்பகுதியில் வரையறுக்கப்பட்ட இருப்பு அளவை காட்டிலும் மிகையாக அவரிடமோ அல்லது அவர் சார்பாக ஏனைய நபரிடமோ இருக்கும் யாதொரு அரிசி இருப்பு தொடர்பாக மாவட்ட ஆட்சியரிடம் தெரிவிக்க வேண்டும். அத்தகைய இருப்புகள், மாவட்ட ஆட்சியரின் உத்தரவுகளின் பேரில் இல்லாமல் யாதொரு அரைவையாளரால் அல்லது வணிகரால் அல்லது ஏனைய நபரால் விற்பனை செய்யப்படக்கூடாது.

**12. அரிசி இருப்பினை கேட்டல்:**

அரிசி இருப்பு வைத்திருக்கின்ற அரைவையாளர் அல்லது வணிகர் ஒவ்வொருவரும், அரசுக்கு அல்லது யாதொரு நபருக்கு அல்லது அத்தகைய வகையைச் சேர்ந்த நபர்களுக்கு மொத்தமாக அல்லது அவருடைய இருப்பின் குறிப்பிட்ட ஒரு பகுதியை, ஆணையாளர் அல்லது மாவட்ட ஆட்சியரின் ஆணையில் குறிப்பிடப்பட்டவாறான முறையில் அங்காடியில் நிலவிவருகிற விலைகளில் விற்பனை செய்வர்.

**13. சட்டப்படிக்கான ஆணைகளின் நிபந்தனைகளை மீறுதல்:**

அரைவையாளர் அல்லது வணிகர் ஒருவர், இந்த ஆணையின் யாதொரு விதித்துறைகளை அல்லது இந்த ஆணையின்கீழ் பிறப்பிக்கப்பட்ட யாதொரு உத்தரவுகள் அல்லது சட்டத்தின் விதித்துறைகளை மீறுகிறபோது, அவர், இச்சட்டத்தின்கீழ் வழக்கு தொடருவதற்கு உட்பட்டவராகிறார்.

**14. வழக்கு தொடருவதற்கான முன் அனுமதி:**

இந்த ஆணையின் யாதொரு விதித்துறைகளை மீறியதற்காக, மீறுவதற்கு முயற்சித்ததாக அல்லது மீறுவதற்கு தூண்டியதாக, யாதொரு நபர் மீதும், மாவட்ட ஆட்சியர் அல்லது ஆணையாளரின் முன்அனுமதி இன்றி வழக்கு தொடரப்படக்கூடாது.

**15. வளாகங்களுக்குள் நுழைந்து, சோதனை மேற்கொண்டு மற்றும் கைப்பற்றுவதற்கான அதிகாரங்கள்:**

(1) இந்த ஆணையில் யாதொரு மீறல் செய்யப்பட்டுள்ளன அல்லது செய்யப்பட்டு வருகிறது அல்லது செய்யப்படவுள்ளது என்று யாதொரு தகுதி வாய்ந்த அதிகாரி நம்புவதற்கு காரணமிருக்கும்போது, அத்தகைய அதிகாரி:

(a) யாதொரு வளாகத்தில் நுழைந்து, யாதொரு புத்தகம், கணக்கு அல்லது ஏனைய ஆவணங்கள் அல்லது யாதொரு நபர் வைத்திருக்கிற அல்லது அவருடைய கட்டுப்பாட்டின்கீழ் உள்ள அரிசி இருப்பை ஆய்வு செய்யலாம்.

(b) அத்தகைய யாதொரு இருப்பு, கணக்கு அல்லது ஏனைய ஆவணத்தை கைப்பற்றலாம்.

(c) அரிசி கொண்டுசெல்வதற்கு பயன்படுத்தப்பட்ட அல்லது பயன்படுத்துவதற்குக் கருதிய யாதொரு நபர், படகு மோட்டார் வண்டி அல்லது வேறு ஏதேனுமொரு வண்டி அல்லது கொள்கலனை நிறுத்தி, சோதனையிடலாம்.

(d) அரிசி இருந்த அத்தகைய சிப்பங்கள், உறைகள் அல்லது கொள்கலன்களுடன் அவற்றையும் அல்லது அத்தகைய பொருட்களை கொண்டு செல்வதற்குப் பயன்படுத்தப்பட்ட விலங்குகள் வண்டிகள், கப்பல்கள், படகுகள் அல்லது ஏனைய ஊர்திகளையும் கைப்பற்றி பின்னர், மேற்சொன்ன சட்டத்தின் 6A பிரிவின் கீழ், குறிப்பிடுகிறவாறு எழுத்துமூலமான அறிக்கை ஒன்றினை மாவட்ட ஆட்சியருக்கு அனுப்ப வேண்டும். ஆனால், கைப்பற்றல் நடவடிக்கை முடிவடைந்த பின்னர் இவ்வாறு கைப்பற்றப்பட்டதற்கான ரசீது ஒன்றை தகுதிவாய்ந்த அதிகாரி உடனடியாக அளிக்க வேண்டும்.

(2) தகுதிவாய்ந்த அதிகாரி இப்பகுதியின்கீழ் அவரிடம் நிலைபெற்றுள்ள யாதொரு அதிகாரத்தை சட்டப்படி செயல்படுத்துவதில் அவருக்கு உதவி செய்யுமாறு, யாதொரு காவல் துறை அதிகாரியின் அல்லது யாதொரு அரசு அதிகாரியின் பணியைக் கேட்டுப்பெறலாம். இத்தகைய வேண்டுகோளை ஏற்பது ஒவ்வொரு அதிகாரியின் கடமையாகும்.

(3) துணைப்பகுதி (1)–ன் விதித்துறைகளுக்குட்பட்டு சோதனை மற்றும் பறிமுதல் செய்வது தொடர்பாக, 1973 ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறை விதிக்கோவையின் (மத்தியச் சட்டம் 2/1974) 100 மற்றும் 165 ஆம் பிரிவுகளின் விதித்துறைகள், இப்பகுதியின் கீழ் சோதனை மற்றும் பறிமுதலுக்குப் பொருந்துவதுபோலவே பொருந்தும்.

**16. சில நேர்வுகளுக்கு இந்த ஆணை பொருந்தாது என்பது:**

(1) துணைப்பகுதி (2)–இல் வெளிப்படையாக வகைசெய்யப்பட்டிருந்தாலன்றி மற்றபடி இந்த ஆணையில் கண்டுள்ள எதுவும் பின்வருவனவற்றிற்குப் பொருந்தாது.

*(i)* 1964 ஆம் ஆண்டு உணவுக்கழகச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 37/1964) கீழ், ஏற்படுத்தப்பட்ட இந்திய உணவுக்கழகம் ;

*(ii)* தமிழக அரசால் ஏற்படுத்தப்பட்ட தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் ;

*(iii)* மத்திய அரசுக்கு அல்லது மாநில அரசுக்குச் சொந்தமான அல்லது அவற்றின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள யாதொரு கழகம் அல்லது நிறுவனம் அல்லது சட்டப்படிக்கான ஒரு கழகம் ;

*(iv)* அரிசி உற்பத்தி, கொள்முதல், விற்பனை, வாங்குதல் அல்லது வழங்குவதில் ஈடுபட்டுள்ள மத்திய அளவிலான அல்லது மாநில அளவிலான கூட்டுறவுச் சங்கம்.

(2) அரசு மற்றும் ஆணையாளர்,

(i) பொதுமக்களின் நலன் கருதி அல்லது யாதொரு நியாயமான மற்றும் போதுமான காரணத்திற்காக தேவையெனக் கருதினால் **தமிழ்நாடு அரசிதழில்** அறிவிக்கை வெளியிட்டு அதில் குறிப்பிடக்கூடிய அத்தகைய நிபந்தனைகளுக்குட்பட்டு துணைப்பகுதி (1) இல் குறிப்பிடப்பட்ட கழகம், நிறுவனம் மற்றும் கூட்டுறவு சங்கத்திற்கு பொதுவான அல்லது குறிப்பிட்ட காலத்திற்கு இருப்பு அளவை நிர்ணயம் செய்யலாம்.

(ii) துணைப்பகுதி (1) இல் குறிப்பிடப்பட்ட கழகம், நிறுவனம் மற்றும் கூட்டுறவு சங்கத்திடமிருந்து யாதொரு தகவலைக் கேட்டுப் பெறலாம்.

**16. ஆணையின் செல்திறன்:—**

இந்த ஆணையின் முகப்புரையில் குறிப்பிடப்பட்டவாறு 7—4—2008 ஆம் நாளிட்ட எஸ்.ஓ.எண் 823 (E) இல் வெளியிடப்பட்ட மத்திய அரசு ஆணையின் செல்திறனை ஒத்து இந்த ஆணையம் செயலில் இருக்கும்.

வழங்கல் அதிகாரியின் கையொப்பம்,
பெயர் மற்றும் பதவிப்பெயருடன்.

(கோப்பு எண் )

**படிவம்—A**

***[தமிழ்நாடு 2008 ஆம் ஆண்டு அரிசி (இருப்புக் கட்டுப்பாடு) ஆணையின் 6 ஆம் பகுதியைக் காண்க]***

*அரைவையாளர் அல்லது வணிகரின் பயன்பாட்டிற்காக அரிசி வரவு விற்பனை, இருப்பு குறித்த இரு வார விவர அறிக்கை:*

1. வணிகரின் பெயர்
2. இரு வாரம் முடிவடையும் நாள்
3. மாநிலம்
4. மாவட்டம்
5. நகரம்
6. அரிசி விற்பனையில் ஆண்டு விற்றுமுதல்
7. இரு வார துவக்கத்தில் இருப்பு மற்றும் இருப்பு உள்ள கிடங்கின் விவரங்கள்
8. கிடங்கின் விவரங்கள் மற்றும் முகவரி

| | *அளவு (குவிண்டாலில்)* | |
|---|---|---|
| | *விற்பனை செய்யாதது* | *விற்பனை செய்யப்பட்டு ஆனால் வழங்கப்படாதவை* |
| *(1)* | *(2)* | *(3)* |
| *அனைத்து கிடங்குகளில் உள்ள மொத்தம்* | | |

9. யாதொரு நபரிடம் அல்லது வங்கி அல்லது கூட்டுறவு சங்கம் போன்ற நிறுவனத்திடம் அடைமானம் வைத்திருந்த இருப்பு

| *இருப்பு அடைமானம் வைக்கப்பட்டிருந்த தரப்பினர் பற்றிய விவரங்கள்.* | *வைத்திருந்த இருப்பு* | *குறியீடு* | *அளவு (குவிண்டாலில்)* |
|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* |

10. வணிகர் வைத்திருந்த மொத்த இருப்பு (தொடர் எண்கள் 8 & 9)

11. இரு வார காலத்தில் கொள்முதல் செய்த அளவு மற்றும் சரக்கு வழங்கிய இடம்

| *சரக்கு வழங்கிய இடம்.* | *முன்னர் கொள்முதல் செய்யப்பட்டு ஆனால் தற்போது பெறப்பட்ட அளவு.* | *கொள்முதல் செய்யப்பட்டு பெறப்பட்ட அளவு.* | *குவிண்டால் ஒன்றுக்கு சராசரியாக செலுத்திய விலை.* |
|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* |

**12.** இரண்டு வார காலத்தில் விற்பனை செய்த அளவு:

| *யாருக்கு விற்பனை செய்யப்பட்டது* | *இருவார காலத்தில் விற்பனை செய்து ஒப்படைக்கப்பட்ட அளவு அல்லது எடுத்துச் செல்லப்பட்ட அளவு.* | | *மொத்தம்* | *விற்பனை செய்யப்பட்டு ஆனால் வழங்கப்படாத அளவு* | | *மொத்தம்.* | *நெடும்பத்தி (4) மற்றும் (7) ஆகியவற்றின் மொத்தம்.* |
|---|---|---|---|---|---|---|---|
| | *உள்ளூர் பகுதியில் அல்லது மாநிலத்திற்குள் கொண்டு செல்லதற்காக.* | *வரி செலுத்திய பின்னர் பிற மாநிலங்களுக்கு கொண்டு செல்வதற்காக.* | | *உள்ளூர் பகுதியில் அல்லது மாநிலத்திற்குள் கொண்டு செல்லதற்காக.* | *வரிசெலுத்திய பின்னர் பிற மாநிலங்களுக்கு கொண்டு செல்வதற்காக.* | | |
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* | *(5)* | *(6)* | *(7)* | *(8)* |
| பெருமளவில் வாங்குபவருக்கு | | | | | | | |
| ஏனைய வணிகருக்கு | | | | | | | |
| அரசுக்கு | | | | | | | |
| மொத்தம்: | | | | | | | |

*விளக்கம்:*

முன்னர் விற்பனை செய்யப்பட்டு ஆனால் இரண்டு வார காலத்தில் வழங்கப்பட்ட அளவும் நெடும்பத்தி **(2)**, **(3)** மற்றும் **(4)** நெடும்பத்திகளில் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும்.

**13.** இரண்டு வார கால இறுதியில் இருப்பு:

| *இருப்பு வைக்கப்பட்டுள்ள கிடங்குகளின் விவரங்கள்.* | *வணிகரிடம் உள்ள இருப்பு (2)* | | *ஈடு செய்யப்பட்டது* | *மொத்தம்* |
|---|---|---|---|---|
| | *விற்பனை செய்யப்படாதது.* | *விற்பனை செய்யப்பட்டு ஆனால் வழங்கப்படாதது.* | | |
| *(1)* | *(a)* | *(b)* | *(3)* | *(4)* |
| மொத்தம்: | | | | |

*விளக்கம்:*

மேற்சொன்ன அட்டவணையைப் பொறுத்தமட்டில் தகவல், இரு வாரம் முடிந்து மூன்று நாட்களுக்குள் கட்டுப்பாட்டு அதிகாரியைச் சென்றடையும் வகையில் **15** ஆம் நாளுடன் முடியும் ஒவ்வொரு இருவாரத்திற்கும் மாதத்தின் கடைசி நாளிலும் அரைவையாளரால் அல்லது வணிகரால் அளிக்கப்பட வேண்டும்.

**14.** பிற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட அரிசியின் அளவு மற்றும் இருப்பின் அளவு

| வரவு (1) | | இருப்புகள் (2) | |
|---|---|---|---|
| பொருள் விவரம் | அளவு (குவிண்டாலில்) | பொருள் விவரம் | அளவு (குவிண்டாலில்) |
| அரிசி | | அரிசி | |

*விளக்கம்:*

அறிவிப்பு செய்த நாளிலிருந்து மூன்று நாட்களுக்குள்ளாக கட்டுப்பாட்டு அதிகாரிக்கு அரைவையாளர் அல்லது வணிகர் இரு நகல்களில் இந்த அறிவிப்பை அளிக்க வேண்டும். சான்றாக வைத்துவருவதற்காக அரைவையாளருக்கு அல்லது வணிகருக்கு கட்டுப்பாட்டு அதிகாரி ஒப்புகை அளித்த நகல் ஒன்று, திரும்ப வழங்கப்பட வேண்டும்.

இடம்: வணிகரின் கையொப்பம்

நாள்: வணிகரின் முத்திரை.

**பெறுநர் :**

**1.** கட்டுப்பாட்டு அதிகாரி.

**2.**

## படிவம்—B

*[தமிழ்நாடு 2008ஆம் ஆண்டு அரிசி (இருப்புக் கட்டுப்பாடு) ஆணையின் 7(1)ஆம் பகுதியைக் காண்க]*

**.........................ஆம் மாதத்திற்கான அரிசி வரவு, வழங்கல், இறுதி இருப்பைக் காட்டும் விவர அறிக்கை.**

1. அரைவையாளர் அல்லது வணிகரின் பெயர் மற்றும் முகவரி :

| *பொருளின் பெயர்* | *ஆரம்ப இருப்பு* | *வரப்பெற்ற அளவு (மெட்ரிக் டன்னில்)* | | | *மாநிலத்திற்குள் வழங்கியது* | |
|---|---|---|---|---|---|---|
| | | *மாநிலத்திற்குள்* | *மாநிலத்திற்கு வெளியே* | *மொத்தம்* | *பெருமளவில் வாங்குபவர்* | *அரைவையாளர் (அ) வணிகர்* |
| *(1)* | *(2)* | *(3)* | | | *(4)* | |

| மாநிலத்திற்கு வெளியே வழங்கியது | மொத்தம் | இறுதி இருப்பு (மெட்ரிக் டன்னில்) | குறைந்தளவு மொத்த விற்பனை விலை (குவிண்டால் ஒன்றுக்கு) | உயரளவு மொத்த விற்பனை விலை (குவிண்டால் ஒன்றுக்கு) |
|---|---|---|---|---|
| *(5)* | *(6)* | *(7)* | *(8)* | *(9)* |

அரைவையாளர் அல்லது வணிகரின் கையொப்பம்

**கே. சண்முகம்,**
*அரசுச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**தி. வைரவசுந்தரம்,**
*இயக்குநர்,*
*தமிழ்வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு) த் துறை.*

## அறிவிக்கை

*[அரசாணை (நிலை) எண் 106, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (D1)த் துறை, நாள்: 9 ஜூன் 2008]*

## தமிழ்நாடு 2008ஆம் ஆண்டு சமையல் எண்ணெய் வித்துக்கள் மற்றும் சமையல் எண்ணெய் (சேமிப்புக் கட்டுப்பாடு)

*ஆணை:*

சமையல் எண்ணெய் வித்துக்கள், சமையல் எண்ணெய்கள் ஆகியவற்றின் வழங்கலைப் பராமரிப்பதற்கும், அவை சம அளவில் வழங்கப்படுவதையும், நியாயவிலைகளில் கிடைக்கப் பெறுவதையும் உறுதிசெய்வதற்கும், மேற்சொன்ன பொருட்களின் சேமிப்புக் கட்டுப்பாட்டுக்கு வகை செய்வது அவசியமானது மற்றும் உகந்தது என்று மாநில அரசு கருதுவதால், தற்போது, 1955ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 10/1955) 3ஆம் பிரிவிலும், 25 அக்டோபர் 1972ஆம் நாளிட்ட இந்திய அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் பாகம்—II, பிரிவு 3,

(ii) உட்பிரிவில் வெளியிடப்பட்ட, மத்திய அரசின் வேளாண் அமைச்சகத்தின் (உணவுத் துறை) 25 அக்டோபர் 1972ஆம் நாளிட்ட G.S.R. 452 (E)ஆம் எண் ஆணையின்படியும், 7 ஏப்ரல் 2008 ஆம் நாளிட்ட இந்திய அரசிதழின் சிறப்பு வெளியீட்டில், பாகம்—II, பிரிவு 3 (ii) உட்பிரிவில் 2ஆம் பக்கத்தில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட மத்திய அரசின் நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோக அமைச்சகத்தின் (நுகர்வோர் விவகாரங்கள் துறை), 7 ஏப்ரல் 2008ஆம் நாளிட்ட S.O.823(E) ஆம் எண் ஆணையின்படியும், மத்திய அரசின் முன்இசைவைப் பெற்றும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், கீழ்க்காணும் ஆணையை இதனால் இயற்றுகிறார். அதாவது :—

**1. குறுந்தலைப்பு, பரப்பு மற்றும் தொடக்கம்:—**

(1) இந்த ஆணை, தமிழ்நாடு 2008ஆம் ஆண்டு சமையல் எண்ணெய் வித்துக்கள் மற்றும் சமையல் எண்ணெய்கள் (சேமிப்புக் கட்டுப்பாடு) ஆணை என அழைக்கப்படும்.

(2) இது, தமிழ்நாடு மாநிலம் முழுவதற்கும் பரவி இருக்கும்.

(3) இது, உடனடியாக செயலுக்கு வரும்.

**2. பொருள் விளக்கங்கள்.**—இந்த ஆணையில் சந்தர்ப்பம் வேறு பொருள் குறித்தாலன்றி, மற்றபடி,

*(a)* ''சட்டம்'' என்பது, 1955ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் சட்டம் (மத்தியச் சட்டம் 10/1955) எனப் பொருள்படும்;

*(b)* ''சென்னை மாநகர் மற்றும் அதனைச் சூழ்ந்துள்ள பகுதி'' என்பது, சென்னை மாநகராட்சி, காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள சைதாப்பேட்டை மற்றும் தாம்பரம் வட்டம், திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள அம்பத்தூர் வட்டம் ஆகியவற்றின் அதிகார வரம்பின்கீழ் வருகிற பகுதி எனப் பொருள்படும்;

*(c)* ''பெருமளவில் நுகர்வோர்'' என்பது, ஒரு ஓட்டல், ஒரு உணவகம், ஒரு மருத்துவமனை, கல்வி நிறுவனம் ஒன்றுடன் இணைந்துள்ள மாணவரில்லம், பணிபுரியும் மகளிருக்கான இல்லம், தங்குமிட வசதிகளுடன் கூடிய சமய நிறுவனம் அல்லது அறக்கட்டளை நிறுவனம் அல்லது நிறுவனத்திற்குள் பயன்படுத்துவதற்காக சமையல் எண்ணெய் வித்துக்கள் மற்றும் சமையல் எண்ணெய்களை வாங்குகிற ஒரு நபர் எனப் பொருள்படும்;

*(d)* ''*A*'' வகையைச் சேர்ந்த ஒரு மாநகர்'' என்பது, பத்து இலட்சம் மற்றும் அதற்கும் மேற்பட்ட மக்கள் தொகையைக் கொண்டுள்ள இந்த ஆணையின் விவர அட்டவணையில் *"A"* வகையைச் சேர்ந்த மாநகராகச் சேர்க்கப்பட்ட ஒரு மாநகர் எனப் பொருள்படும்.

*(e)* ''*B*'' வகையைச் சேர்ந்த மாநகர்'' என்பது, மூன்று இலட்சம் மற்றும் அதற்கு மேற்பட்ட, ஆனால் பத்து இலட்சத்திற்கும் குறைவான மக்கள் தொகையையும், "A" வகையைச் சேர்ந்த மாநகர் நீங்கலாக, மாவட்டத் தலைமையிடங்கள் மற்றும் இடங்களையும் கொண்டுள்ள, இந்த ஆணையின் விவர அட்டவணையில் *"B"* வகையைச் சேர்ந்த ஒரு மாநகராகச் சேர்க்கப்பட்ட ஒரு மாநகர் எனப் பொருள்படும்;

(f) 'C' வகையைச் சேர்ந்த மாநகர் என்பது, "A" வகையைச் சேர்ந்த மாநகர் அல்லாத அல்லது *'B'* வகையைச் சேர்ந்த மாநகர் அல்லாத ஒரு மாநகர் எனப் பொருள்படும்;

(g) ''ஆட்சியர்'' என்பது.—

(i) சென்னை மாநகர் மற்றும் அதனைச் சூழ்ந்துள்ள பகுதியைப் பொறுத்த வரையில், அவரவர் சம்பந்தப்பட்ட அதிகார வரம்பிற்குள், நேர்விற்கேற்ப, வடக்கு மற்றும் தெற்கு நுகர்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு ஆணையாளர்கள் (மாநகர்) எனவும்; மற்றும்

(ii) பிற இடங்களில், கூடுதல் மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட வருவாய் அதிகாரி உட்பட சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர் எனவும் பொருள்படும்;

*(h)* ''ஆணையாளர்'' என்பது, நுகர்வோர் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு கூடுதல் ஆணையாளர்கள் அல்லது இணை ஆணையாளர்கள் உட்பட நுகர்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு ஆணையாளர் எனப் பொருள்படும்;

(i) ''தகுதிவாய்ந்த அதிகாரி'' என்பது—

(i) சென்னை மாநகர் மற்றும் அதனைச் சூழ்ந்துள்ள பகுதியில் உள்ள சோதனை ஆய்வாளர் பதவித் தரத்திற்குக் குறையாத நுகர்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் யாதொரு அதிகாரி;

(ii) சென்னை மாநகர் மற்றும் அதனைச் சூழ்ந்துள்ள பகுதி நீங்கலாக, மாவட்டங்களிலுள்ள, துணை வட்டாட்சியர் பதவித் தரத்திற்குக் குறையாத வருவாய்த் துறையின் யாதொரு அதிகாரி;

(iii) காவல் துறை சார்பு ஆய்வாளர், பதவித்தரத்திற்குக் குறையாத காவல் துறையின் யாதொரு அதிகாரி; மற்றும்

(iv) ஆணையாளர் சிறப்பாக அனுமதியளிக்கிற நுகர்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் யாதொரு அதிகாரி எனப் பொருள்படும்.

(j) ''கட்டுப்பாட்டு அதிகாரி'' என்பது.—

(i) சென்னை மாநகர் மற்றும் அதனைச் சூழ்ந்துள்ள பகுதியைப் பொறுத்தவரையில், அவரவர் அதிகார வரம்பிற்குட்பட்ட நுகர்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் உதவி ஆணையாளர்கள்;

(ii) பிற இடங்களில், அவரவர் அதிகார வரம்பிற்குட்பட்ட மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அதிகாரிகள், எனப் பொருள்படும்.

*(k)* ''தரகு முகவர்'' என்பது, பொருட்களை விற்பனை செய்யும் அல்லது வாங்கும் நோக்கங்களுக்காக, பொருட்களை விற்பனை செய்வதற்கான அல்லது பொருட்களை அனுப்புவதற்கான அதிகாரத்துடன் கூடிய முகவர் போன்று வழக்கமான வணிக நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள ஒரு தரகு முகவர் எனப் பொருள்படும்;

*(l)* ''வணிகர்'' என்பது, சமையல் எண்ணெய் வித்துக்கள், சமையல் எண்ணெய்கள் ஆகியவற்றை நேரடியாக அல்லது வேறுவகையில் விற்பனை செய்வதற்காக, கொள்முதல் செய்தல், எடுத்துச் செல்லுதல், விற்பனை செய்தல், வழங்கல், விநியோகித்தல்

அல்லது சேமித்து வைத்தல் ஆகிய தொழில்களில் ஈடுபட்டுள்ள, யாதொரு நபர் எனப் பொருள்படும், அத்தகைய தொழிலில் ஈடுபட்டுள்ள தற்காலிக வணிகர், மொத்த விற்பனையாளர் மற்றும் சில்லறை விற்பனையாளர் இதில் அடங்குவர். ஆனால், தனக்குச் சொந்தமான அல்லது குத்தகைக்கு எடுத்துள்ள நிலத்தில் தன்னுடைய சொந்த சாகுபடிமூலம் உற்பத்தி செய்து, நேர்வுக்கேற்ப, ஒரு கிராமத்தில் அல்லது நகரத்தில் சமையல் எண்ணெய் வித்துக்கள் மற்றும் சமையல் எண்ணெய்களை சேமித்து வைத்திருக்கிற பெருமளவில் நுகர்கிற ஒருவர் அல்லது ஒரு நபர் இதில் அடங்க மாட்டார்.

*விளக்கம்.*— இந்தத் துணைப் பகுதியின் செயல்நோக்கத்திற்காக, யாதொரு சமயத்தில், கீழ்க்காணும் அளவுகளுள்ள சமையல் எண்ணெய் வித்துக்கள் மற்றும் சமையல் எண்ணெய்களை உடைமையாக வைத்துள்ள யாதொரு நபர், தான் ஒரு வணிகர் அல்ல என்று வேறுவகையில் நிரூபித்தாலன்றி மற்றபடி, வணிகராகக் கருதப்பட வேண்டும். தான் ஒரு வணிகர் அல்ல என்பதை நிரூபிக்கும் பொறுப்பு, சம்பந்தப்பட்ட நபரைச் சார்ந்ததாகும், அதாவது:—

| | |
|---|---|
| (i) நீரகச் செறிவூட்டப்பட்ட தாவர எண்ணெய்கள் உட்பட சமையல் எண்ணெய்கள் | நீரகச் செறிவூட்டப்பட்ட தாவர எண்ணெய்கள் உட்பட, அனைத்து சமையல் எண்ணெய்களையும் ஒன்றாகச் சேர்த்து 10 குவிண்டால். |
| (ii) தோடுடன் கூடிய நிலக்கடலை உட்பட சமையல் எண்ணெய் வித்துக்கள் | 50 குவிண்டால் அனைத்து சமையல் எண்ணெய் வித்துக்கள். |

*(m)* ''சமையல் எண்ணெய்'' என்பது, மக்கள் பயன்படுத்துவதற்காக, நேரடியாக அல்லது செயல்முறைப்படுத்தப்பட்ட பின்னர் பயன்படுத்துகிற மற்றும் நீரகச் செறிவூட்டப்பட்ட தாவர எண்ணெய்கள் உட்பட யாதொரு எண்ணெய் எனப் பொருள்படும்;

*(n)* ''சமையல் எண்ணெய் வித்துக்கள்'' என்பது, மக்கள் பயன்படுத்துவதற்காக, சமையல் எண்ணெய்களைப் பிழிந்தெடுப்பதற்காகப் பயன்படுத்துகிற வித்துக்கள் எனப் பொருள்படும்;

(o) ''படிவம்'' என்பது இந்த ஆணையுடன் இணைக்கப்பட்டுள்ள ஒரு படிவம் எனப் பொருள்படும்;

*(p)* ''அரசு'' என்பது தமிழ்நாடு அரசு எனப் பொருள்படும்;

(q) ''ஏனைய பகுதிகள்'' என்பது 'A', 'B' மற்றும் 'C' வகையைச் சேர்ந்த மாநகர்களின்கீழ் வராத பகுதிகள் எனப் பொருள்படும்;

(r) ''வியாபார இடம்'' என்பது, சேமிப்பிடம் நீங்கலாக, வணிகர் ஒருவர் அவர் இருப்பில் வைத்துள்ள சமையல் எண்ணெய் வித்துக்களை அல்லது சமையல் எண்ணெய்களை விற்பனை செய்கிற யாதொரு இடம் எனப் பொருள்படும்;

*(s)* ''சேமிப்பிடம்'' என்பது, வியாபார இடம் நீங்கலாக, விற்பனை செய்வதற்காக, வணிகர் ஒருவர், சமையல் எண்ணெய் வித்துக்களையும் சமையல் எண்ணெய்களையும் சேமித்து வைப்பதற்கான யாதொரு இடம் எனப் பொருள்படும்;

*(t)* ''உற்பத்தியாளர்'' என்பது கீழ்கண்டவற்றின்மூலம் யாதொரு சமையல் எண்ணெய் வித்துக்களை அரைத்தல், வெளியேற்றுதல், பிழிந்தெடுத்தல் (தயாரித்தல் அல்லது சுத்திகரித்தல்) ஆகிய தொழிலை மேற்கொண்டுள்ள ஒரு நபர் எனப் பொருள்படும்;

(i) செய்முறைப்படுத்தப்படுவதற்காக சமையல் எண்ணெய் வித்துக்களை வாங்குதல் மற்றும் மொத்த விற்பனையாளர் ஒருவருக்கு, பணி நிறைவுபெற்ற பொருட்களை அவரே விற்பனை செய்தல் அல்லது தரகு முகவர் ஒருவர்மூலம்; அல்லது

(ii) மற்றொருவரின் சார்பில் அரைத்தல், வெளியேற்றுதல், பிழிந்தெடுத்தல் (தயாரித்தல் அல்லது சுத்திகரிப்பு செய்தல்) ஆகிய யாதொரு செய்முறைப் பணிகளைச் செய்வதன்மூலம்;

*(u)* ''சில்லறை விற்பனையாளர்'' என்பது, அத்தகைய சில்லறை விற்பனை வணிகத்திற்காக, சமையல் எண்ணெய் வித்துக்கள் மற்றும் சமையல் எண்ணெய்களை எடுத்துச் செல்லுதல், வழங்குதல், விநியோகித்தல் அல்லது சேமித்தல் ஆகிய சில்லறை விற்பனை வணிகத்தில் ஈடுபட்டுள்ள ஒரு வணிகர் எனப் பொருள்படும். அவர், தனக்குத் தேவையானவற்றை, ஒரு மொத்த விற்பனையாளரிடமிருந்து அல்லது உற்பத்தியாளர் ஒருவரிடமிருந்து வாங்கி நுகர்வோருக்கு விற்பனை செய்கிறார். மொத்த விற்பனையாளர் அல்லாத ஒவ்வொரு வணிகரும் இதில் அடங்குவர்; மற்றும்

(*v*) ''மொத்த விற்பனையாளர்'' என்பது, பிற வணிகர்களுக்கு அல்லது பெருமளவில் நுகர்வோருக்கு சமையல் எண்ணெய் வித்துக்களை அல்லது சமையல் எண்ணெய்களை விற்பனை செய்கிற ஒரு வணிகர் எனப் பொருள்படும்.

**3. தகவல் அளித்தல்:—**

*(1)* வேளாண் தொழில் செய்பவராக அல்லது தானே உழவராக உள்ள ஒரு வணிகர், ஒவ்வொரு விளைச்சல் ஆண்டும் தொடங்கியவுடன், அவருக்குச் சொந்தமாக உள்ள அல்லது குத்தகைக்கு எடுத்து அவரால் சாகுபடி செய்யப்படுகிற புன்செய் நிலம் மற்றும் நன்செய் நிலத்தின் நில அளவை எண், பரப்பு ஆகியவை பற்றிய விவரங்களை, கட்டுப்பாடு அதிகாரிக்கு, அறுவடைக்குப் பின்னர் பதினைந்து நாட்களுக்குள் மேற்சொன்ன நிலத்திலிருந்து கிடைக்கிற சமையல் எண்ணெய் வித்துக்கள் மற்றும் சமையல் எண்ணெய்களின் மொத்த உற்பத்தியை, வணிகர் அறிவிப்பதோடு, அத்தகைய விளைபொருளின் பயன்பாடு மற்றும் சேமிப்புக்கான கணக்குகளையும் கட்டுப்பாடு அதிகாரியிடம் அளிக்க வேண்டும்.

(2) பகுதி—9ல் சில்லறை விற்பனையாளர் ஒருவருக்கு குறிப்பிட்டுள்ள சமையல் எண்ணெய் வித்துக்கள் மற்றும் சமையல் எண்ணெய்களின் இருப்பு வரையறைகளுக்கும் அதிகமாக இருப்பு வைத்துள்ள ஒவ்வொரு வணிகர் அல்லது உற்பத்தியாளர், வரவுகள் மற்றும் செய்த விற்பனை, அவர்கள் வைத்துள்ள சமையல் எண்ணெய் வித்துக்கள் மற்றும் சமையல் எண்ணெய்களின் இருப்பு ஆகியவற்றைப் பொறுத்த வரையில், படிவம்—A இல் இரு வார கால கணக்கு விவர அறிக்கை ஒன்றை, கட்டுப்பாட்டு அதிகாரிக்கு அளிக்க வேண்டும்.

**4. வணிகரின் செயல்பாட்டுப் பகுதி:—**

(1) மொத்த விற்பனையாளர் ஒருவர், தமிழ்நாடு மாநிலத்திற்குள் அல்லது தமிழ்நாடு மாநிலத்திற்கு வெளியே சமையல் எண்ணெய் வித்துக்களை அல்லது சமையல் எண்ணெய்களைக் கொள்முதல் செய்யலாம் அல்லது விற்பனை செய்யலாம். ஆனால், கொள்முதல் செய்த நாளிலிருந்து ஏழு நாட்களுக்குள், இருப்புகளை, அவருடைய வியாபார இடத்திற்கு அல்லது சேமிப்பு இடத்திற்கு அவர் எடுத்துச் செல்ல வேண்டும்.

ஆனால், மொத்த விற்பனையாளர், அவருடைய கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணங்களினால், மேற்சொன்ன காலஅளவிற்குள், இருப்புகளை எடுத்துச்செல்ல இயலாத நேர்வில், அவருடைய வியாபார இடம் அல்லது சேமிப்பு இடம் அமைந்துள்ள மாவட்ட ஆட்சியரிடமிருந்து கால அவகாச நீட்டிப்பை அவர் பெற வேண்டும்.

மேலும், அத்தகைய கால அவகாச நீட்டிப்பு, கொள்முதல் செய்த நாளிலிருந்து முப்பது நாட்களுக்கு மேற்படக்கூடாது.

(2) சில்லறை விற்பனையாளர் ஒருவர், அவர் வியாபாரம் செய்கிற மாவட்டத்திற்குள் அல்லது கட்டுப்பாட்டு அதிகாரியின் அதிகார வரம்பிற்குட்பட்ட பகுதிக்குள் சமையல் எண்ணெய் வித்துக்களை அல்லது சமையல் எண்ணெய்களைக் கொள்முதல் செய்யலாம்.

**5. கணக்கு விவர அறிக்கைகள்:—**

(1) சமையல் எண்ணெய் வித்துக்களின் அல்லது சமையல் எண்ணெய்களின் மொத்த விற்பனையாளர் ஒவ்வொருவரும் படிவம் Bஇல் மாதாந்திர கணக்கு விவர அறிக்கை ஒன்றை, கட்டுப்பாட்டு அதிகாரியிடம் அளிக்க வேண்டும்.

(2) சமையல் எண்ணெய் வித்துக்களின் அல்லது சமையல் எண்ணெய்களின் வணிகர் ஒவ்வொருவரும், ஆணையாளர் அல்லது மாவட்ட ஆட்சியர் குறிப்பிடக்கூடியவாறான அத்தகைய கால இடைவெளிகளில், அத்தகைய ஏனைய கணக்கு விவர அறிக்கைகளையும் அளிக்க வேண்டும்.

**6. விலக்கு அளிப்பதற்கான அதிகாரம்:—**

அரசு, மத்திய அரசின் முன் ஒப்புதலுடன், அறிவிக்கைமூலம், அதில், மிகையான இருப்பு ஒருவகை செய்யப்பட வேண்டிய கால அளவைக் குறிப்பிட்டு, யாதொரு நபருக்கு, நிறுவனத்திற்கு அல்லது ஏனைய யாதொரு முகவரமைப்பிற்கு, இந்த ஆணையின் விதித்துறைகளிலிருந்து விலக்கு அளிக்கலாம் மற்றும் யாதொரு சமயத்தில், அத்தகைய விதிவிலக்கிலிருந்து மாறுபடலாம். விதிவிலக்கை திருத்தியமைக்கலாம். ரத்து செய்யலாம் அல்லது திரும்பப் பெறலாம் மற்றும் அத்தகைய வரிவிலக்கை தற்காலிகமாக நிறுத்தி வைக்கலாம்.

ஆனால், பிற நாடுகளிலிருந்து இருப்புகளை இறக்குமதி செய்வதற்கு, மத்திய அரசு அளித்த பகிரங்க பொது உரிமத்தின்கீழ் இறக்குமதி செய்யப்பட்ட சமையல் எண்ணெய் வித்துக்கள் அல்லது சமையல் எண்ணெய்களைப் பொறுத்தவரையில், குறிப்பிடப்பட்ட இருப்பு வரையறைகளுக்காக, இறக்குமதியாளர்களுக்கு விதிவிலக்கு அளிப்பதற்கு, மத்திய அரசின் முன் ஒப்புதல் பெறத்தேவையில்லை.

**7. உத்தரவு பிறப்பிப்பதற்கான அதிகாரம்:—**

(1) சமையல் எண்ணெய் வித்துக்கள், சமையல் எண்ணெய்கள் ஆகியவற்றின் வழங்கலைப் பராமரிக்கும் நோக்கத்திற்காகவும், அவை சம அளவில் வழங்கப்படுவதையும், நியாய விலைகளில் கிடைக்கப்பெறுவதையும் உறுதி செய்வதற்காகவும், இந்த ஆணையின் விதித்துறைகளைச் செயல்படுத்துவதற்காக, அரசு, ஆணையாளர், மாவட்ட ஆட்சியர் அல்லது கட்டுப்பாடு அதிகாரி உத்தரவுகள் பிறப்பிக்கலாம். அனைத்து வணிகர்கள் மற்றும் நபர்கள் அத்தகைய உத்தரவுகளுக்கு இணங்கி நடக்க வேண்டும்.

(2) (1) ஆம் துணைப் பகுதியின் பொதுவான தன்மைக்கு பாதகமில்லாமல் பின்வரும் பிரச்சினைகள் அனைத்திற்கும் அல்லது ஏதாவது ஒன்றுக்கு, அத்தகைய உத்தரவுகள் வகைசெய்யப்படலாம், அதாவது:—

*(a)* கொள்முதல் பட்டிகள், கைச்சாத்துகள், ஆவணங்கள், கணக்குகள், கொள்முதல், இருப்பு மற்றும் வணிகர்கள் விற்பனை செய்த சமையல் எண்ணெய் வித்துக்கள் மற்றும் சமையல் எண்ணெய்கள் தொடர்பான பதிவேடுகள் வைத்துவருதல் மற்றும் வணிகர்கள் வைத்திருந்த இருப்புகள் வணிகர்கள் அவ்வப்போது மேற்கொண்ட கொள்முதல் மற்றும் விற்பனைகள் ஆகியவை குறித்து குறிப்பிட்ட கால அளவிற்கொருமுறை விவரக் கணக்குகளை அளித்தல்.

*(b)* வணிகர்கள் விற்பனை செய்த சமையல் எண்ணெய் வித்துக்கள் மற்றும் சமையல் எண்ணெய்களின் இரசீதுகள் மற்றும் பொருள் விவரப் பட்டியல்களை வழங்குதல்;

*(c)* சமையல் எண்ணெய் வித்துக்கள் மற்றும் சமையல் எண்ணெய்களின் விற்பனை பணிகளில் ஈடுபட்டுள்ள வணிகர்கள் வைத்துள்ள சேமிப்பு இடங்கள் உட்பட, வணிகர்களின் வணிக செயல்பாடு கொண்ட பகுதியை மாற்றியமைத்தல், திருத்தியமைத்தல் அல்லது வேறுபடுத்துதல்.

*(d)* யாதேனும் ஒரு நேரத்தில் அல்லது யாதொரு நேரத்தின்போது, சமையல் எண்ணெய் வித்துக்கள் மற்றும் சமையல் எண்ணெய்களின் கொள்முதல், விற்பனை மற்றும் சேமிப்பு குறித்த உயரளவு அல்லது குறைந்தளவு வரம்புகளை மாற்றியமைத்தல், திருத்தியமைத்தல் அல்லது வேறுபடுத்துதல்.

*(e)* சமையல் எண்ணெய் வித்துக்கள் மற்றும் சமையல் எண்ணெய்களை எவரிடமிருந்து அல்லது எந்தெந்த நிறுவனங்களிடமிருந்து வாங்க வேண்டும் மற்றும் எவரெவருக்கு எந்தெந்த நிறுவனங்களுக்கு வணிகர்கள் விற்பனை செய்ய வேண்டும் என்பதற்கான நிபந்தனைகள்.

*(f)* சமையல் எண்ணெய் வித்துக்கள் மற்றும் சமையல் எண்ணெய்களின் சேமிப்பு இடங்கள் மற்றும் சேமித்து வைக்கப்பட வேண்டிய முறைகள் உட்பட வணிக வளாகங்களை பேணுதல்.

**8. சமையல் எண்ணைய் வித்துகள் மற்றும் சமையல் எண்ணெய்களை வைத்திருப்பதற்கு அல்லது விற்பனை செய்வதற்கு மறுப்பு தெரிவிப்பது தொடர்பான வரையறை.**

யாதொரு வணிகரும், அவர் வைத்திருந்த சமையல் எண்ணெய் வித்துக்கள் மற்றும் சமையல் எண்ணெய்களை விற்பனை செய்யாமல் அல்லது விற்பனை செய்வதற்கு மறுப்பு தெரிவித்து, அவற்றை வைத்திருக்கக்கூடாது.

**9. சமையல் எண்ணெய் வித்துக்கள் மற்றும் சமையல் எண்ணெய்களின் சேமிப்பு தொடர்பான வரையறை—**

(1) யாதொரு வணிகர் அல்லது உற்பத்தியாளர், இந்த ஆணைசெயலுக்கு வந்த நாளிலிருந்து பதினைந்து நாட்களுக்குப் பின்னர், அவரோ அல்லது அவர் சார்பான யாதொரு நபரோ, அந்தந்த நேர்விற்கேற்ப கீழே குறிப்பிடப்பட்ட அளவைக் காட்டிலும் மிகையாக யாதொரு சமையல் எண்ணெய் வித்துக்கள் அல்லது சமையல் எண்ணெயை யாதொரு சமயத்திலும் இருப்பில் அல்லது பொறுப்பில் அவர் வைத்திருக்கக்கூடாது.

| *இடங்களின் வகை* | *இருப்பு அளவுகள் (குவிண்டாலில்)* | | *குறிப்புரைகள்* |
|---|---|---|---|
| | *மொத்த விற்பனையாளர்* | *சில்லறை விற்பனையாளர்* | |
| I. ஓடுடன் கூடிய நிலக்கடலை உள்ளிட்ட சமையல் எண்ணெய் வித்துக்கள் | | | 1. சமையல் எண்ணெய் வித்துக்கள் அனைத்தும் ஒன்றாக எடுத்துக் கொள்ளப்பட்டது. |
| வகை‘A’ மாநகர் | 1500 | 100 | 2. நிலக்கடலை பருப்பு அல்லது வித்துக்களுக்கு, குறிப்பிடப்பட்ட 75% வரையறை பொருந்தும். |
| வகை ‘B’ மாநகர் | 1000 | 75 | |
| வகை ‘C’ மாநகர் மற்றும் ஏனைய பகுதிகள் | 500 | 50 | |
| II. நீரகச்செறிவூட்டப்பட்ட (ஹைட்ரோஜினேட்டட்) தாவர எண்ணெய்கள் உள்ளிட்ட சமையல் எண்ணெய்கள். | | | நீரகக்செறிவூட்டப்பட்ட (ஹைட்ரோஜினேட்டட்) தாவர எண்ணெய்கள் உட்பட சமையல் எண்ணெய்கள் அனைத்தும். |
| வகை ’A’ மாநகர் | 600 | 20 | |
| வகை ‘B’ மாநகர் | 400 | 12 | |
| வகை ‘C’ மாநகர் மற்றும் ஏனைய பகுதிகள் | 250 | 08 | |

ஆனால், வணிகர் ஒருவர், சமையல் எண்ணெய் வித்துக்கள் மற்றம் சமையல் எண்ணெய்கள் தயாரிப்பாளராக அல்லது சமையல் எண்ணெய் வித்துக்கள் மற்றும் சமையல் எண்ணெய்கள் தரகு முகவராக, வணிகம் மேற்கொண்டு வருகிறபோது, இது குறித்த அத்தகைய வணிகம் மற்றும் கணக்குகள் தனித்தனியாகவும், முற்றிலும் வேறாகவும் வைக்கப்படுமாயின், அத்தகைய வணிகம் ஒவ்வொன்றிற்காக, இந்த உட்பகுதியில் குறிப்பிடப்பட்ட இருப்பு அளவுகளை இருத்திவைப்பதற்கு அவருக்கு உரிமையுண்டு.

மேலும், கீழே அட்டவணையிலுள்ள (1) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்ட தயாரிப்பாளர், 2 ஆம் நெடும்பத்தியில் நிகராக குறிப்பிடப்பட்ட அளவைக் காட்டிலும் மிகையாக அரைக்கப்படாத சமையல் எண்ணெய் வித்துக்கள் அல்லது கடுகு விதைகளை யாதொரு சமயத்திலும் சேமித்து வைத்திருக்கவோ அல்லது வைத்திருக்கவோ கூடாது. அவர், மேற்சொன்ன அட்டவணையிலுள்ள (3) நெடும்பத்தியின் நிகரான பதிவில் குறிப்பிடப்பட்ட அளவைக் காட்டிலும் மிகையான அளவில் விற்பனைக்கேற்ப செய்முறைப்படுத்தப்பட்ட சமையல் எண்ணெய் வித்துக்களை இருப்பில் வைத்திருக்கக்கூடாது.

**அட்டவணை**

| *தயாரிப்பாளர்* | *அரைக்கப்படாத சமையல் எண்ணெய் வித்துக்கள் அல்லது கடுகு விதைகளின் அளவு.* | | *சுத்திகரிக்கப்பபட்ட எண்ணெய் உள்ளிட்ட விற்பனைக்கேற்ப செய்முறைப்படுத்தப்பட்ட சமையல் எண்ணெய்களின் இருப்பின் அளவு.* | |
|---|---|---|---|---|
| (1) | (2) (*a*) இந்த ஆணை செயல்படத் தொடங்கிய நாள் முதற்கொண்டு வணிகம் மேற்கொண்டு வருகிற தயாரிப்பாளர் | (2) (*b*) இந்த ஆணை செயல்படத் தொடங்கிய நாளுக்குப்பின்னர் உற்பத்தி தொடங்கியுள்ள தயாரிப்பாளர் | (3) (*a*) இந்த ஆணை செயல்படத் தொடங்கிய நாள் முதற்கொண்டு வணிகம் மேற்கொண்டு வருகிற தயாரிப்பாளர் | (3) (*b*) இந்த ஆணை செயல்படத் தொடங்கிய நாளுக்குப் பின்னர், உற்பத்தி தொடங்கியுள்ள தயாரிப்பாளர் |

**அட்டவணை**—*தொடர்ச்சி*

| (1) | (2) (a) | (2) (b) | (3) (a) | (3) (b) |
|---|---|---|---|---|
| சமையல் எண்ணெய் தயாரிப்பாளர் | 31–10–2006 ஆம் நாளுடன் முடிவடைந்த யாதொரு மூன்று ஆண்டுகளில் அவரால் பயன்படுத்தப்பட்ட சமையல் எண்ணெய் வித்துக்களின் உயரளவில் எட்டில் ஒரு பங்கு | அவருடைய உற்பத்தி தொடங்கப்பட்ட நாளிலிருந்து ஓராண்டு காலத்திற்கு அவருடைய ஆண்டு நிறுவு கொள்திறனுக்கு இணையான அளவிற்கு உற்பத்தி செய்வதற்கு எட்டில் ஒருபங்கு அளவிற்கு சமையல் எண்ணெய் வித்துக்கள் தேவைப்படும். அவருடயை இரண்டாம் மற்றும் மூன்றாம் ஆண்டு உற்பத்திக்கு அவருடைய ஆண்டு நிறுவு ஒரு கொள்திறனுக்கு இணையான அளவிற்கு எட்டில் ஒரு பங்கு அளவிற்கு சமையல் எண்ணெய் வித்துக்கள் தேவைப்படும். அதன் பின்னர், அவருடைய உற்பத்தி தொடங்கப்பட்ட பின்னர், அடுத்து வரும் யாதொரு மூன்றாண்டுகளில் அவரால் பயன்படுத்தப்பட்ட பருப்புகளின் உயரளவில் எட்டில் ஒரு பங்கு | 31–10–2006 ஆம் நாளுடன் முடிவடைந்த யாதொரு மூன்று ஆண்டுகளில் அவருடைய உயரளவு உற்பத்தியில் 24 இல் ஒரு பங்கு | அவருடைய உற்பத்தி தொடங்கப்பட்ட நாளிலிருந்து அவராகாலத்திற்கு மூன்று ஓராண்டு காலத்திற்கு அவருடைய ஆண்டு நிறுவு கொள்ளளவுத் திறனுக்கு இணையாக 24–இல் ஒருபங்கு அவருடைய இரண்டாம் மற்றும் மூன்றாம் ஆண்டு உற்பத்தியில் அவருடைய ஆண்டு நிறுவு கொள்ளளவுத் திறனுக்கு இணையான 24–இல் ஒரு பங்கு மற்றும் அவருடைய உற்பத் தொடங்கப்பட்ட பின்னர் வரும் யாதொரு மூன்று ஆண்டுகளில் அவருடைய உயரளவு உற்பத்தியில் 24–இல் ஒரு பங்கு |

ஆனால், சமையல் எண்ணெய் வித்துக்கள் மற்றும் சமையல் எண்ணெய் ஆகியவை யாதொரு அளவில் எடுத்துச் செல்லப்படுகிறபோது, எடுத்துச் செல்லப்படும் அத்தகைய அளவானது இந்த உட்பகுதியின் நோக்கத்திற்காக, யாதொரு ஒப்பந்தம் அல்லது உடன்படிக்கையின் வரம்புகளுக்கிணங்க, இருப்பில் இருத்தி வைக்கப்பட்டுள்ள கால அளவில் அந்தந்த நேர்விற்கேற்ப வணிகர் அல்லது உற்பத்தியாளரின் இருப்புகளில் சேர்க்கப்பட்டுள்ளதாக கருதப்பட வேண்டும்.

மேலும், மேலே குறிப்பிடப்பட்ட சமையல் எண்ணெய் வித்துக்கள் மற்றும் சமையல் எண்ணெய்களின் இருப்பு வரையறைகள், இறக்குமதி செய்யப்பட்ட இருப்புகளுக்கு பொருந்தாது.

(2) (1) உட்பகுதியில் குறிப்பிடப்பட்ட வணிகர் அல்லது உற்பத்தியாளர், ஒவ்வொருவரும், அந்த உட்பகுதியில் குறிப்பிடப்பட்ட கால அளவு முடிவடைந்த உடனேயே, (1) உட்பகுதியில் வரையறுக்கப்பட்ட இருப்பு அளவைக் காட்டிலும் மிகையாக அவரிடமோ அல்லது அவர் சார்பாக ஏனைய நபரிடமோ இருக்கும் யாதொரு சமையல் எண்ணெய் வித்துக்கள் மற்றும் சமையல் எண்ணெய்களின் இருப்பு தொடர்பாக மாவட்ட ஆட்சியரிடம் தெரிவிக்க வேண்டும். அத்தகைய இருப்புகள், மாவட்ட ஆட்சியரின் உத்தரவுகளின் பேரில் இல்லாமல், யாதொரு வணிகரால் அல்லது ஏனைய நபரால் விற்பனை செய்யப்படக்கூடாது.

**10. சமையல் எண்ணெய் வித்துக்கள் மற்றும் சமையல் எண்ணெய்களின் இருப்பினை கேட்டல்:–**

சமையல் எண்ணெய் வித்துக்கள் மற்றும் சமையல் எண்ணெய்களை இருப்பு வைத்திருக்கிற வணிகர் ஒவ்வொருவரும், அரசுக்கு அல்லது யாதொரு நபருக்கு அல்லது அத்தகைய வகையைச் சேர்ந்த நபர்களுக்கு மொத்தமாக அல்லது அவருடைய இருப்பின் குறிப்பிடப்பட்ட ஒரு பகுதியை, அங்காடியில் நிலவிவருகிற விலைகளில் விற்பனை செய்வர்.

**11. வணிகர் ஒருவரால் இறக்குமதி செய்யப்பட்ட இருப்பு விவரங்களை அறிவிப்பு செய்தல்:–**

ஏனைய நாடுகளிலிருந்து, சமையல் எண்ணெய் வித்துக்கள், சமையல் எண்ணெய்கள் ஆகியவற்றை இறக்குமதி செய்கிற வணிகர் ஒவ்வொருவரும், இரண்டு வாரங்களுக்கொரு முறை, அரசு அல்லது ஆணையாளரால் அவ்வப்போது அறிக்கையிடப்பட்டவாறாக, கட்டுப்பாட்டு அதிகாரி அல்லது அதிகாரிகளிடம், அவரால் இருத்திவைக்கப்பட்ட வரவினங்கள் மற்றும் இருப்பு விவரங்கள் குறித்து படிவம்–a–இல் அறிவிக்க வேண்டும்.

(2) இந்தப் பகுதியின்கீழ், அறிவிப்பு ஒவ்வொன்றும் இரு படிகளில் செய்யப்பட வேண்டும். அதன் ஒரு நகலானது, மேலே உட்பகுதி (1)–இல் குறிப்பிடப்பட்ட அதிகாரிகளால் ஒப்புகையிடப்பட்டு, சம்பந்தப்பட்ட வணிகருக்கு அனுப்பப்பட வேண்டும். அந்த வணிகர் அவர் செய்துள்ள அறிவிப்பிற்கு ஆதாரமாக அதனை தன்னிடமே வைத்துக்கொள்வார்.

(3) இந்தப் பகுதியின்கீழ் அறிவிப்பு ஒன்று செய்வதற்கு உட்பட்ட வணிகர் ஒவ்வொருவரும், அத்தகைய அறிவிப்பினை அவர் அனுப்பிய நாளிலிருந்து மூன்று நாட்களுக்குள், மேலே (1) உட்பகுதியில் குறிப்பிடப்பட்ட அதிகாரிகளிடம் அந்த அறிவிப்பு சென்றடைந்தது என்பதை உறுதிசெய்ய வேண்டும். ஏதேனுமொரு காரணத்தால், மேலே குறிப்பிடப்பட்ட கால அளவிற்குள் (1) உட்பகுதியில் குறிப்பிடப்பட்ட அதிகாரிகள் அறிவிப்பை பெறவில்லையாயின், அறிவிப்பு செய்வதற்கு உட்பட்ட வணிகர் அத்தகைய அறிவிப்பு செய்யவில்லை என்று கருதப்படும்.

**12. சட்டப்படிக்கான ஆணைகளின் நிபந்தனைகளை மீறுதல்—**

வணிகர் ஒருவர், இந்த ஆணையின் யாதொரு விதித்துறைகளை அல்லது இந்த ஆணையின்கீழ் பிறப்பிக்கப்பட்ட யாதொரு உத்தரவுகள் அல்லது சட்டத்தின் விதித்துறைகளை மீறுகிறபோது, அவர், இச்சட்டத்தின்கீழ் வழக்கு தொடருவதற்கு உட்பட்டவராகிறார்.

**13. வழக்கு தொடருவதற்கான முன் அனுமதி——**

இந்த ஆணையின் யாதொரு விதித்துறைகளை மீறியதற்காக, மீறுவதற்கு முயற்சித்ததாக அல்லது மீறுவதற்கு தூண்டியதாக, யதொரு நபர் மீதும், மாவட்ட ஆட்சியர் அல்லது ஆணையாளரின் முன் அனுமதி இன்றி வழக்கு தொடரப்படக்கூடாது.

**14. வளாகங்களுக்குள் நுழைந்து, சோதனை மேற்கொண்டு மற்றும் கைப்பற்றுவதற்கான அதிகாரங்கள்—**

(1) இந்த ஆணையில் யாதொரு மீறல் செய்யப்பட்டுள்ளன அல்லது செய்யப்பட்டு வருகிறது அல்லது செய்யப்படவுள்ளது என்று யாதொரு தகுதிவாய்ந்த அதிகாரி நம்புவதற்கு காரணமிருக்கும்போது, அத்தகைய அதிகாரி,—

(*a*) யாதொரு வளாகத்தில் நுழைந்து யாதொரு புத்தகம், கணக்கு அல்லது ஏனைய ஆவணங்கள் அல்லது யாதொரு நபர் வைத்திருக்கிற அல்லது அவருடைய கட்டுப்பாட்டின்கீழ் உள்ள சமையல் எண்ணெய் வித்துக்கள் மற்றும் சமையல் எண்ணெய்களின் இருப்பை ஆய்வு செய்யலாம்.

(*b*) அத்தகைய யாதொரு இருப்பு கணக்கு அல்லது ஏனைய ஆவணத்தை கைப்பற்றலாம்.

(*c*) சமையல் எண்ணெய் வித்துக்களை அல்லது சமையல் எண்ணெய்களை கொண்டு செல்வதற்கு பயன்படுத்தப்பட்ட அல்லது பயன்படுத்துவதற்குக் கருதிய யாதொரு நபர் படகு, மோட்டார் வண்டி அல்லது வேறு ஏதேனுமொரு வண்டி அல்லது கொள்கலனை நிறுத்தி, சோதனையிடலாம்.

(*d*) சமையல் எண்ணெய் வித்துக்கள், சமையல் எண்ணெய்கள் இருந்த அத்தகைய சிப்பங்கள் உறைகள் அல்லது கொள்கலன்களுடன் அவற்றையும் அல்லது அத்தகைய பொருட்களை கொண்டு செல்வதற்குப் பயன்படுத்தப்பட்ட விலங்குகள், வண்டிகள், கப்பல்கள், படகுகள், அல்லது ஏனைய ஊர்திகளையும் கைப்பற்றி பின்னர், மேற்சொன்ன சட்டத்தின் 6A பிரிவின்கீழ், குறிப்பிடுகிறவாறு எழுத்துமூலமான அறிக்கை ஒன்றினை மாவட் ஆட்சியருக்கு அனுப்ப வேண்டும்.

ஆனால், கைப்பற்றல் நடவடிக்கை முடிவடைந்த பின்னர், இவ்வாறு கைப்பற்றப்பட்டதற்கான ரசீது ஒன்றை தகுதிவாய்ந்த அதிகாரி உடனடியாக அளிக்க வேண்டும்.

(2) தகுதிவாய்ந்த அதிகாரி இப்பகுதியின்கீழ் அவரிடம் நிலைபெற்றுள்ள யாதொரு அதிகாரத்தை சட்டப்படி செயல்படுத்துவதில் அவருக்கு உதவி செய்யுமாறு யாதொரு காவல்துறை அதிகாரியின் அல்லது யாதொரு அரசு அதிகாரியின் பணியைக் கேட்டுப்பெறலாம். இத்தகைய வேண்டுகோளை ஏற்பது ஒவ்வொரு அதிகாரியின் கடமையாகும்.

(3) துணைப்பகுதி (1)—ன் விதித்துறைகளுக்குட்பட்டு, சோதனை மற்றும் பறிமுதல் செய்வது தொடர்பாக 1973 ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறை விதிக்கோவையின் (மத்தியச் சட்டம் 2/1974) 100 மற்றும் 165 ஆம் பிரிவுகளின் விதித்துறைகள் இப்பகுதியின்கீழ் சோதனை மற்றும் பறிமுதலுக்குப் பொருந்துவது போலவே பொருந்தும்.

**15. சில நேர்வுகளுக்கு இந்த ஆணை பொருந்தாது என்பது—**

(1) துணைப்பகுதி (2)—இல் வெளிப்படையாக வகைசெய்யப்பட்டிருந்தாலன்றி மற்றபடி, இந்த ஆணையில் கண்டுள்ள எதுவும் பின்வருவனவற்றிற்குப் பொருந்தாது—

(i) 1964ஆம் ஆண்டு உணவுக்கழக சட்டத்தின் (மத்தியச் சட்டம் 37/1964) கீழ், ஏற்படுத்தப்பட்ட இந்திய உணவுக் கழகம்,

(ii) தமிழக அரசால் ஏற்படுத்தப்பட்ட தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்,

(iii) மத்திய அரசுக்கு அல்லது மாநில அரசுக்குச் சொந்தமான அல்லது அவற்றின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள யாதொரு கழகம் அல்லது நிறுவனம் அல்லது சட்டப்படிக்கான ஒரு கழகம் மற்றும்

(iv) சமையல் எண்ணெய் வித்துக்கள் மற்றும் சமையல் எண்ணெய் உற்பத்தி, கொள்முதல், விற்பனை, வாங்குதல் அல்லது வழங்குவதில் ஈடுபட்டுள்ள மத்திய அளவிலான அல்லது மாநில அளவிலான கூட்டுறவுச் சங்கம்.

(2) அரசு அல்லது ஆணையாளர்,

பொது மக்களின் நலன் கருதி அல்லது யாதொரு நியாயமான மற்றும் போதுமான காரணத்திற்காக தேவையெனக் கருதினால் *தமிழ்நாடு அரசிதழில்* அறிவிக்கை வெளியிட்டு அதில் குறிப்பிடக்கூடிய அத்தகைய நிபந்தனைகளுக்குட்பட்டு துணைப்பகுதி (1)—இல் குறிப்பிடப்பட்ட கழகம், நிறுவனம் மற்றும் கூட்டுறவு சங்கத்திற்கு பொதுவான அல்லது குறிப்பிட்ட காலத்திற்கு இருப்பு அளவை நிர்ணயம் செய்யலாம்.

(ii) துணைப்பகுதி (1)—இல் குறிப்பிடப்பட்ட கழகம், நிறுவனம் மற்றும் கூட்டுறவு சங்கத்திடமிருந்து யாதொரு தகவலைக் கேட்டுப் பெறலாம்.

**16. இவ்வாணையின் செல்திறன்—**

இவ்வாணையின் முகப்புரையில் குறிப்பிடப்பட்டவாறு, 2008 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 7 ஆம் நாளிட்ட எஸ்.ஓ.எண் 823 (E)—இல் வெளியிடப்பட்ட மத்திய அரசு ஆணையின் செல்திறனை ஒத்து இந்த ஆணையும் செயலில் இருக்கும்.

*வழங்கல் அதிகாரியின் கையொப்பம்,*
*பெயர் மற்றும் பதவிப் பெயருடன்.*

(கோப்பு எண். )

**படிவம்—A**

*[தமிழ்நாடு 2008 ஆம் ஆண்டு எண்ணெய் வித்துக்கள் மற்றும் சமையல் எண்ணெய்கள் (இருப்புக் கட்டுப்பாடு) ஆணையின் 3(2) மற்றும் 11(1) பகுதிகளைக் காண்க.]*

**வணிகர் அல்லது உற்பத்தியாளரின் பயன்பாட்டிற்காக**

சமையல் எண்ணெய் வித்துக்கள் மற்றும் சமையல் எண்ணெயின் வரவு விற்பனை மற்றும் இருப்பு குறித்த இருவார விவர அறிக்கை:

1. சமையல் எண்ணெய் வித்துக்கள் மற்றும் சமையல் எண்ணெயின் பெயர் :
2. வணிகரின் பெயர் :
3. இருவார காலம் முடிவடையும் நாள் :
4. மாநிலம் :
5. மாவட்டம் :
6. நகரம் :
7. அனைத்து சமையல் எண்ணெய் வித்துக்கள் மற்றும் சமையல் எண்ணெயின் ஆண்டு விற்றுமுதல் :
8. இருவார கால துவக்கத்தில் இருப்பு மற்றும் இருப்பு வைக்கப்பட்டுள்ள கிடங்குகளின் விவரங்கள். :

| *கிடங்கின் முகவரி மற்றும் விவரங்கள்.* | *அளவு குவிண்டாலில்* | |
|---|---|---|
| | *விற்பனை செய்யப்படாதது* | *விற்பனை செய்யப்பட்டு ஆனால் வழங்கப்படாதது.* |
| *(1)* | *(2)* | *(3)* |

(அனைத்து கிடங்குகளிலும் உள்ள மொத்த இருப்பு) :

9. யாதொரு நபர் அல்லது வங்கி அல்லது கூட்டுறவுச் சங்கம் முதலியன போன்ற நிறுவனத்தில் அடைமானம் வைக்கப்பட்டள்ள இருப்புகள் :

| *யாரிடம் அடைமானம் வைக்கப்பட்டது என்பது குறித்த விவரங்கள்.* | *வைத்துள்ள இருப்பு.* | *குறியீடு.* | *அளவு குவிண்டாலில்.* |
|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* |

10. வணிகர் வைத்துள்ள மொத்த இருப்பு :
(தொடர் எண் 8 & 9)

**11. இரு வார காலத்தில் கொள்முதல் செய்த அளவு மற்றும் எங்கிருந்து கொள்முதல் செய்யப்பட்டது பற்றிய விவரங்கள் :**

| *எங்கிருந்து கொள்முதல் செய்யப்பட்டது.* | *இருவார காலத்தில் விற்பனை செய்யப்பட்டு வழங்கப்பட்ட அல்லது எடுத்து செல்லப்பட்ட அளவு.* | *கொள்முதல் செய்த மற்றும் பெறப்பட்ட அளவு.* | *குவிண்டால் ஒன்றுக்கு சராசரியாக செலுத்திய தொகை.* |
|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* |

**12. இருவார காலத்தில் விற்பனை செய்த அளவு :**

| *யாருக்கு விற்பனை செய்யப்பட்டது.* | *இருவார காலத்தில் விற்பனை செய்யப்பட்டு வழங்கப்பட்ட அல்லது எடுத்துச் செல்லப்பட்ட அளவு.* | | *மொத்தம்* | *விற்பனை செய்யப்பட்டு ஆனால் வழங்கப்படாத அளவு.* | | *மொத்தம்* | *நெடும்பத்தி (4) மற்றும் (7)–ன் மொத்தம்.* |
|---|---|---|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* | *(5)* | *(6)* | *(7)* | *(8)* |
| | உள்ளூர் பகுதியில் அல்லது மாநிலத்திற்குள் கொண்டு செல்வதற்காக. | பிற மாநிலங்களுக்குக் கொண்டு செல்வதற்காக. | | உள்ளூர் பகுதியில் அல்லது மாநிலத்திற்குள் கொண்டு செல்வதற்காக. | பிற மாநிலங்களுக்குக் கொண்டு செல்வதற்காக. | | |
| பெருமளவில் பயன்படுத்துவோருக்கு | | | | | | | |
| சில்லரை வியாபாரிகளுக்கு | | | | | | | |
| ஏனைய வணிகர்களுக்கு | | | | | | | |
| அரசுக்கு | | | | | | | |
| மொத்தம்: | | | | | | | |

***விளக்கம்:***

முன்னர் விற்பனை செய்யப்பட்டு ஆனால் இருவார கால அளவில் வழங்கப்பட்ட அளவு (2), (3), (4) ஆகிய நெடும்பத்திகளில் சேர்க்கப்பட வேண்டும்.

**13. இரு வார கால முடிவில் உள்ள இருப்பு:**

| *இருப்பு வைத்துள்ள கிடங்குகளின் விவரம்.* | *வணிகரிடம் உள்ள இருப்பு* | | *அடைமானம் வைக்கப்பட்டது* | *மொத்தம்* |
|---|---|---|---|---|
| | விற்பனை செய்யப்படாதது (a) | விற்பனை செய்யப்பட்டு ஆனால் வழங்கப்படாதது. (b) | | |
| மொத்தம்: | | | | |

***விளக்கம்:***

மேற்சொன்ன அட்டவணை குறித்த தகவல், இருவார காலம் முடிவடைந்து மூன்று நாட்களுக்குள் கட்டுப்பாட்டு அதிகாரியை சென்றடையும் வகையில் 15 ஆம் நாளுடன் முடிவடையும் ஒவ்வொரு இருவார காலத்திற்கும் மாதத்தின் கடைசி நாளிலும் வணிகர் மற்றும் உற்பத்தியாளரால் அளிக்கப்பட வேண்டும்.

**14. பிற நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட சமையல் எண்ணெய் வித்துக்கள் மற்றும் சமையல் எண்ணெயின் வரவு மற்றும் இருப்பை அறிவித்தல்.**

| *வரவு* | | *இருப்பு* | |
|---|---|---|---|
| *(1)* | | *(2)* | |
| பொருள் விவரம் | அளவு (குவிண்டாலில்) | பொருள் விவரம் | அளவு (குவிண்டாலில்) |
| 1. சமையல் எண்ணெய் வித்துக்கள் | | 1. சமையல் எண்ணெய் வித்துக்கள் | |
| 2. சமையல் எண்ணெய் | | 2. சமையல் எண்ணெய் | |

***விளக்கம்:***

அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து மூன்று நாட்களுக்குள் வணிகர் இந்த அறிவிப்பை கட்டுப்பாடு அதிகாரிக்கு இரு நகல்களில் கட்டுப்பாட்டு அதிகாரிக்கு இரு நகல்களில் அளிக்க வேண்டும். கட்டுப்பாட்டு அதிகாரி ஒப்புகை அளித்த ஒரு நகல் அறிவிப்பு செய்ததற்கு சான்றாக வணிகருக்கு திருப்பி அனுப்பப்படும்.

இடம்:

நாள்: *வணிகரின் கையொப்பம்.*

முத்திரை:

1. கட்டுப்பாட்டு அதிகாரி:
2.

**படிவம்—B**

*[தமிழ்நாடு 2008 ஆம் ஆண்டு சமையல் எண்ணெய் வித்துக்கள் மற்றும் சமையல் எண்ணெய் (இருப்புக் கட்டுப்பாடு) ஆணையின் 5(1)ஆம் பகுதியைக் காண்க.]*

**............................... மாதத்திற்கு சமையல் எண்ணெய் வித்துக்கள் மற்றும் சமையல் எண்ணெயின் வரவு, வழங்கல், இறுதி இருப்பு ஆகியவற்றைக் காட்டும் விவர அறிக்கை:**

**1. மொத்த விற்பனையாளரின் பெயர் மற்றும் முகவரி:**

| *பொருளின் பெயர்* | *ஆரம்ப இருப்பு* | *வரவு (மெட்ரிக்) (3)* | | | *மாநிலத்திற்குள் வழங்கியது. (4)* | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | *மாநிலத்திற்குள்* | *மாநிலத்திற்கு வெளியே.* | *மொத்தம்* | *பெருமளவில் பயன்படுத்துவோர்.* | *சில்லறை விற்பனையாளர்.* | *மொத்த விற்பனையாளர்.* |
| *(1)* | *(2)* | | | | | | |

| *மாநிலத்திற்கு வெளியே வழங்கியவை* | *மொத்தம்* | *இறுதி இருப்பு (மெட்ரிக் டன்)* | *குறைந்தளவு மொத்த விற்பனை விலை (குவிண்டால் ஒன்றுக்கு)* | *உயரளவு மொத்த விற்பனை விலை (குவிண்டால் ஒன்றுக்கு)* |
|---|---|---|---|---|
| *(5)* | *(6)* | *(7)* | *(8)* | *(9)* |

*மொத்த வியாபாரியின் கையொப்பம்.*

**அட்டவணை**

(பகுதி 2(d), பகுதி 2(e), பகுதி 2(f) மற்றும் 2(q)—வைக் காண்க.)

| A வகை மாநகரம் | B வகை மாநகரம் | C வகை நகரம் மற்றும் ஏனைய பகுதிகள். |
|---|---|---|
| 1. சென்னை மாநகரம் | 1. கோயம்புத்தூர்<br>2. திருச்சிராப்பள்ளி<br>3. சேலம்<br>4. திருநெல்வேலி<br>5. மதுரை<br>6. மாவட்டத் தலைமை இடங்கள் மற்றும் A வகை மாநகரத்தைத் தவிர ஏனைய பகுதிகள். | |

**கே. சண்முகம்,**
*அரசு செயலாளர்.*

(தமிழாக்கம்)

**தி. வைரவசுந்தரம்,**
இயக்குநர்,
*தமிழ்வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி (மொழிபெயர்ப்பு) த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.